திருவள்ளுவர் ஆண்டு 2039

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி :102 பகுதி : 5 மே - 08



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு



ஓவியம் - **வீ. தெய்வேந்திரன்**
இளம் இலக்கியம் முதலாமாண்டு
,செந்தமிழ்க் கல்லூரி, மதுரை - 1.

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 102
பகுதி : 5
மே 2008

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2039




| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |

**தலைவர்**
மன்னர் **நா.குமரன் சேதுபதி**
இராமநாதபுரம்

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்


இதழ்மணம் 171

நூல் மதிப்புரை — இரா. அழகுமலை எம்.ஏ. எம்.பில் 172

தேனூரும் அகுதை மன்னனும் 174
பி. ஆறுமுகம், எம்.ஏ., எம்.எட்., எம்ஃபில்., பிஎச்.டி.,

ஆகமப் பொருள் — முனைவர் சுப. அண்ணாமலை 180

தமிழில் முதல் டாக்டர் பட்டம் பெற்ற சாஸ்திரி 185
பேராசிரியர் அ. காமாட்சிநாதன்

இடக்கரடக்கல் — க. தண்டபாணி 194

சங்க இலக்கிய ஆய்வுத்தளங்கள் 196
உ.சண்முகநாதன்

வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் வாழ்வும், பணியும் 200
முனைவர். க.சின்னப்பா

# இதழ்மணம்

வாசிப்பதற்கான வழித்தடங்களை ஏற்படுத்தும் நுழைவாயிலே நூல் மதிப்புரை. தமிழ்ச் சங்கச் செயலாளர் திருமிகு.இரா.அழகுமலை அவர்கள் மாறிவரும் கலாச்சாரச் சீரழிவு காலகட்டத்தில் மனிதநேயத்தை வளர்க்கும் பொருட்டு "வசந்த பரவல்" என்னும் நூலினை மதிப்புரை வழங்கியிருப்பது காலம் கருதி செய்த சிறப்பு.

பெருகி வரும் ஆய்வுக் காலகட்டத்தில் சங்க காலத்தில் வாழ்ந்த தலையானங்காலத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன் அவர்களின் படைத்தலைவருள் ஒருவனான 'அகுதை' பற்றியும், ஒரம்போகியாரால் பாடப்பட்ட தேனூர் பற்றியும் தொல் ஆய்வாளர்களிடம் நேர்காணல் கண்டும், பல்வேறு ஏடுகளை ஆராய்ந்தும் 'தேனூரும் அகுதை மன்னனும்' என்னும் ஆய்வினை கட்டுவிரித்துள்ளார் முனைவர் பி.ஆறுமுகம்.

உருவக்காட்சி மன உணர்விற்கு இன்பம் நல்கும். அருவக்காட்சி உயிருணர்விற்குப் பேரின்பம் நல்கும் என்பதனை முனைவர் சுப.அண்ணாமலை அவர்கள், "ஆகமப் பொருள்" என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

மறைந்த முனைவர் பி.எஸ்.சுப்ரமணிய சாஸ்திரி அவர்களைப் பற்றி எளிய அறிமுகமும், அவரது தமிழ்ப் பணியும், மொழி பெயர்ப்புப் பணியும் விவரித்துச் செல்லும் இலகுவான கட்டுரையைப் பேராசிரியர் அ.காமாட்சிநாதன் அவர்கள் 'தமிழில் முதல் டாக்டர் பட்டம் பெற்ற சாஸ்திரி' என்னும் தலைப்பில் வடித்துள்ளார்.

சொல்லத்தகாத சொற்களை மறைத்து தகுந்த பிறசொற்களால் பொருளைத் தெரிவிக்கும் "இடக்கரடக்கல்" என்னும் வழக்கை காரண காரியத்தோடு திரு.க.தண்டபாணி அவர்கள் விளக்கியுள்ளார்.

பாட்டும் தொகையும் என்று அழைக்கப்படும் "சங்க இலக்கியம்" பல்வேறு உட்பொருளைக் கொண்டுள்ளது. திரு.உ.சண்முகநாதன் அவர்கள் "சங்க இலக்கிய ஆய்வுத்தளங்கள்" என்னும் தலைப்பில் குறிப்பிடுகின்றார்.

நான்காம் தமிழ்ச் சங்கம் உருவாக்கி தமிழ் மண்ணில் என்றும் வாழும் வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்கள். அவர்களது தமிழ்ப்பணி காலத்தால் அழிக்க முடியாத வரலாற்றுச் சுவடாக இருக்கிறது. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் நாவன்மைமிக்க பேச்சாளராகவும், ஆய்வாளராகவும், பதிப்பாசிரியராகவும், கவிபாடும் வல்லவராகவும் திகழ்ந்தார் என்பதை முனைவர்.க.சின்னப்பா அவர்கள் "வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவரின் வாழ்வும் பணியும்" என்னும் கட்டுரையில் விளக்கியுள்ளார்.

— ஆசிரியர் —

# நூல் மதிப்புரை

இரா. அழகுமலை எம்.ஏ. எம்.பில்

நூல் : **வசந்தப் பரவல்**
ஆசிரியர் : திரு. இரா. மோகன்குமார்
வெளியீடு : அறிவுச்சுடர் பதிப்பகம்

நூலாசிரியர் திரு. இரா. மோகன்குமார் அவர்கள், வான்புகழ் வள்ளுவத்தைச் சிக்கெனப் பற்றிக்கொண்டு வாழ்கின்ற தமது வாழ்வியல் அனுபவங்களை, வள்ளுவம் தந்த வாழ்க்கை நெறியை '**வசந்தப் பரவல்**' என்ற நூலாகத் தந்திருக்கிறார்.

"ஈரடி அச்சாணியின் (திருக்குறள்) உதவியுடன் வையத்தார் பயணிக்க வேண்டுகோள் விடுக்கும் ஒரு கடமையின் வெளிப்பாடே இப்படைப்பு" என்று நூலாசிரியரே குறிப்பிடுகிறார்.

திருக்குறளும் நாலடியாரும் மனித வாழ்வை நெறிப்படுத்தும் விதத்தை, எளிமையாகவும் இனிமையாகவும் விளக்கிக் கற்போர் நெஞ்சில் நிலைபெறச் செய்யும் வித்தையைச் செய்திருக்கிறார் ஆசிரியர்.

**"நட்பிற்கு இறப்பில்லை..... நட்பைத் தாங்கிய இருவர்**
**பிரிந்தாலும் இறந்தாலும் நட்பு மறைவதில்லை"**

இவ்வரிகளில் நட்பின் நலம் அருமையாக எடுத்துரைக்கப்படுகிறது.

**"கல்வியின் நோக்கம் அறம் உரைப்பது"**

கற்றோரெல்லாம் நல்லோராக இருத்தல் வேண்டும் என்ற ஆசிரியரின் உணர்ந்த எண்ணம் இங்கு புலப்படுகிறது.

தொல்காப்பியம் முதல் பாரதி வரை, உலகியலுக்கு உரிய உயரிய பண்புகளை விதைக்கின்ற முறைமையை இந்நூலில் காணலாம்.

சேலம் தமிழ்ச் சங்கத்தின் செயற்கரிய பணிகள் இந்நூலுள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

வெள்ளரிக்காய் விற்கும் ஏழைப்பெண் குப்பாயியின் வாழ்க்கைப் போராட்டத்தைக் கதைசார்ந்த கட்டுரையாக்கியது புதுமை.

**"புதிய பார்வை, புதிய பாதை, புதிய பரிணாமம்"** என்ற கட்டுரை ஆசிரியரின் கல்விபற்றிய புதுமைச் சிந்தனைக்குத் தக்கதொரு சான்று.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ**
**வள்ளுவத்தைக் கைக் கொள்வோம்"**

என்ற குறிக்கோளை உணர்த்தும் "வசந்தப் பரவல்" நற்சிந்தனைகளின் பதிவாக விளங்குகிறது. இந்தப் "பரவலை" பரவலாக எல்லோரும் படித்து உணரவேண்டும். அவ்வாறு உணர்த்தலே வசந்தமாகும்!

## மறக்க முடியாத சங்க இலக்கியப் பாடல்

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

புறம்-183, பொருண்மொழிக் காஞ்சி

**''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே**
**பிறப்போரன்ன உடன் வயிற்றுள்ளும்**
**சிறப்பின்பாலால் தாயும் மனம் திரியும்**
**ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்**
**மூத்தோன் வருக என்னாது**
**அவருள் அறிவுடையோனா றரசுஞ் செல்லும்**
**வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்**
**கீழ்பால் ஒருவன் கற்பின்**
**மேற்பாலொருவனும் அவன் கட்படுமே.''**

# தேனூரும் அகுதை மன்னனும்

**பி. ஆறுமுகம்,** எம்.ஏ., எம்.எட்., எம்ஃபில்., பி.எச்.டி.,
முதல்நிலைக் காவலர்,
அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவில் காவல் நிலையம், மதுரை.

**முன்னுரை**

ஆற்றுப்பெருக்கற்று அடிசுடும் நாளில் எல்லாம் ஊற்றுப்பெருக்கால் உலகூட்டும் வற்றாத சிறப்புடையது தேனூர். இவ்வூர் மதுரையிலிருந்து மேற்கே, பதினைந்து கிலோமீட்டர் தொலைவில், வைகை நதியின் வடகரையில், சமயநல்லூருக்கும் திருவேடகத்திற்கும் இடையே அமைந்துள்ளது. சங்ககாலத்தில் இத்தேனூரை மையமாக வைத்து ஒரு பெருநிலவேந்தனும், குறுநிலமன்னனும் ஆட்சி செய்ததுபோல் தெரிகிறது. இத்தேனூரை ஆட்சி செய்து வந்த பெருநிலவேந்தனையும் குறுநிலவேந்தனையும் இலக்கியத் தரவுகளோடு வெளிக் கொணர்வது இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**தேனூரும் தேர்வண் கோமானும்**

தேனூரில் பஞ்சாயத்து அலுவலகம், கொட்டாரம்; பள்ளிவாசல், பிள்ளையார் கோயில் ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதிகள் நடுக்கோட்டை என்று பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகிறது. இதன்காரணத்தை அறிய முற்பட்டபோது, தேனூரில் பாண்டிய மன்னன் கோட்டை கட்டி வாழ்ந்தான். அவன் வாழ்ந்த பகுதிதான் நடுக்கோட்டையாகும்[1] என்கிறார் இராமலிங்கம் சேர்வை. இத்தகவல்மூலம் தேனூரில் ஒரு கோட்டை இருந்தது என அறியமுடிகிறது. தேனூர் தேர்வண் கோமான் என்ற அரசனின் தலைமையிடமாகும்.[2] என்று கனகசபைபிள்ளை கூறுகிறார். மேலும், தேனூர் தேர்வண் கோமான் என்ற அரசனின் தலைமையிடமாகத் திகழ்ந்திருந்தது என்றும், அத்தேனூர் மதுரை மாவட்டம் சோழவந்தான் வட்டம் திருவேடகத்தருகில் அமைந்துள்ளது[3] என்றும்

அறிஞர் க.ம. வீரணன் தமது ஆய்வில் கூறுகிறார். மேலும், வைகை வடகரையில், திருவேடகத்தருகில் அமைந்துள்ள தேனூரே சங்ககாலத் தேனூர் எனலாம்[4] என்கிறார் ஔவை துரைச்சாமிபிள்ளை. மேலும் சங்க இலக்கியத்தில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு என்ற நூலில்,

"திண்தேர்த் தென்னவன் நன்னாட் டுள்ளதை
வேனிலாயினுந் தண்புன லொழுகுந்
தேனூ ரன்ன" (ஐங்-54, வரி.1-3)

கரும்பி னெந்திரங் களிற்றெதிர் பிளிற்றுந்
தேர்வண் கோமான் தேனூ ரன்ன (ஐங்-55, வரி.1,2)

பகலிற் றோன்றும் பல்கதிர்த் தீயின்
ஆம்பலஞ் செறுவிற் றேனூ ரன்ன (ஐங்-57, வரி.1,2)

என்று தேனூர் ஓரம்போகியார் என்ற புலவரால் பலவாறாகப் புகழ்ந்து பாடப்பட்டிருக்கிறது. எனவே மேற்கூறிய சான்றுகள் மூலம் தேனூர் சங்ககாலத்தில் இருந்தது என்றும், அத்தேனூரே மதுரை மாவட்டத்தில் வைகை வடகரையில் அமைந்துள்ள தேனூர் என்றும் அத்தேனூர் தேர்வண்கோமான் என்ற அரசனின் தலைமை இடமாக இருந்தது என்றும் அறியமுடிகிறது.

**தேனூரும் பெருநில வேந்தனும்**

தேர்வண்கோமான் என்ற அரசன் பெருவேந்தனா அல்லது சிற்றரசனா என்பதை அறிய பின்வரும் சான்றுகள் நமக்குத் துணைபுரிகின்றன. தமிழரசர் முத்திறப்பட்டிருந்தனர். இம்முத்திறத்தாரும் முறையே தலைமையரசருக்கு வேந்தன் கோ (கோன்) என்னும் பெயரும் மரபாக உரிய என்கிறார் தேவநேயப்பாவாணர்.[5] இக்கருத்தின் மூலம் பழங்காலத்தில்

தலைமையரசருக்கு வேந்தன், கோ (கோன்) என்ற சிறப்புப் பெயரே வழங்கப்பட்டிருந்தன என்பதை அறியமுடிகிறது. தேனூரில் ஆட்சி செய்த அரசனை தேர்வண் கோமான் (ஐங்.55,பா.வ.2) என்று ஐங்குறுநூற்று வரிகள் கூறுவதால் இச்சங்க நூலில் வரக்கூடிய அரசனும் தலைமையரசனே எனலாம்.

**தலையாலங்கானத்துச் செருவென்ற**
**பாண்டியன் நெடுஞ்செழியனும் தேனூரும்**

அக்காலத்தில் சமணரைப் பேணிய, பாண்டியன் நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற ஒரே பெயரில் மூவர் பாண்டிய நாட்டை ஆண்டார்கள்[6] என்று இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுக்கள் வாயிலாக நாம் அறிகிறோம்.

மேற்கூறிய மூவருள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கும் தேனூருக்கும் தொடர்பு இருந்ததாகவே தோன்றுகிறது. அடுபோர், மரப்போர், நெடுந்தேர், கடுந்தேர், இயல்தேர், கொடித்தேர், திண்டேர் முதலிய அடைமொழிகள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியனைக் குறிக்கின்றன[7] என்கிறார் மயிலை சீனிவேங்கடசாமி. இக்கருத்தின் மூலம் திண்ணிய தேர்ப்படையை உடையவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என அறியலாம். தேனூரை ஆட்சி செய்த தலைமையரசனை திண்டேர் தென்னவன் (ஐங்.பா.54) என்று ஐங்குறுநூறு கூறுவதால் ஐங்குறுநூற்றில் வரக்கூடிய திண்டேர் தென்னவன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியனே என்றும், இவனே பெருநில வேந்தன் என்றும் மேற்கூறிய சான்றுகளால் அறியமுடிகிறது.

**தேனூர் அகுதை மன்னனும் திகிரிப்படையும்**

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்ற பெருநிலவேந்தனின் ஆட்சிக்குட்பட்டு ஒரு குறுநில மன்னன் இருந்தான். அவன் தேனூரரை மையமாக வைத்து ஆட்சிசெய்தான் என்பதற்குப் பின்வரும் கருத்துக்கள் சான்று பகர்கின்றன. சங்ககாலத்தில் தேனூரரை மையமாக வைத்து ஒரு குறுநில மன்னன் ஆட்சி செய்தான்[8] என்று தொல்லியல் அறிஞர் வேதாசலம் கூறுகிறார். இவர் கருத்தை உற்றுநோக்கும்போது, தேனூர் ஒரு குறுநில மன்னனால் ஆளப்பட்டிருக்கிறது என்ற செய்தி புலனாகிறது. அகுதை என்ற மன்னன் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களில் ஒருவன்[9] என்று பழந்தமிழாட்சி என்ற நூலில் தேவநேயப் பாவாணர் கூறுகிறார். அகுதை என்ற குறுநில மன்னன் பாண்டியர் படையில் பணியாற்றியவன்; தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் படைத்தலைவருள் ஒருவன்[10] எனக் கூறுவர் சில ஆராய்ச்சியாளர்கள். எனவே மேற்கூறிய சான்றுகளை நோக்கும்போது அகுதையும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியனும் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த மன்னரும் வேந்தருமாவர் என்ற செய்தி புலனாகிறது. அகுதை கூடலில் வாழ்ந்தவன் என்று கபிலரும் (புறம்: 347:5) கொடித்தேர்ச் செழிய (புறம்:24:23) என்ற வரிகளை சான்றாக வைத்து கூடலைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் என்று பரணரும் மாங்குடிக்கிழாரும்[11] கூறுகின்றனர். அகுதை மரபினர் கூடலின் பழைய வேந்தர்களாக இருக்க வேண்டும்[12] என்று சங்ககால மன்னர் காலநிலை என்ற நூலில் புருசோத்தமன் கூறுகின்றார். எனவே, பெருநில வேந்தனான தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சிக்கு உட்பட்டு தேனூர் அமைந்திருந்தாலும், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் படைத்தலைவருள் ஒருவன் அகுதை என்று சில ஆராய்ச்சியாளர்கள்

கருதுவதாலும், தேனூரை மையமாகக் கொண்டு ஒரு குறுநில மன்னன் ஆட்சி செய்தான் என்று தொல்லியல் அறிஞர் வேதாசலம் கூறுவதாலும் கூடல்பகுதியில் அமைந்திருந்த, தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சிக்குட்பட்ட, தேனூரை மையமாக வைத்து ஆட்சி செய்த குறுநில மன்னன் அகுதையே எனக் கொள்ளலாம்.

இந்த அகுதை மன்னன் திருமாலின் சக்கராயுதம் போன்ற ஒரு திகிரிப் படையை வைத்திருந்தான்[13] எனவும் அறிகிறோம். இக்கருத்திலிருந்து தேனூரில் படைகள் தங்குவதற்கும் அப்படைகள் பயிற்சிகள் மேற்கொள்வதற்கும் ஒரு களம் இருந்திருக்க வேண்டும்.

> ''அழகர்மலைக் கொம்பையும் தாண்டி நல்ல
> அழகான தேனூர் மைதான வெளிதாண்டி''[14]

என்று கான்சாகிபு சண்டைக்கதைப் பாடல் தேனூரில் ஒரு மைதானம் இருந்தது என்ற செய்தியைக் கூறுகிறது. அம்மைதானம் தற்போது தேனூர் சிவகாமி ஆலைக்குப் பின்புறம் அமைந்துள்ள மைதானமே எனக் கொள்ளலாம். அம்மைதானத்தில் தான் முதுமக்கட்தாழிகள் கிடைத்து வருகின்றன.

**முடிவுகள்**

தேனூர் சங்ககாலத்தில் குறுநில மன்னர்களின் தலைமையிடமாக இருந்துள்ளது. இவ்வூர் ஐங்குறுநூறு என்ற சங்க இலக்கியத்தில் ஓரம்போகியாரால் சிறப்பித்துப் பாடப்பட்டிருக்கிறது. இவ்வூரை மையமாக வைத்து ஆட்சி செய்த பெருநிலவேந்தன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான். இந்த நெடுஞ்செழியனின் படைத்தலைவருள் ஒருவன் அகுதை. அந்த அகுதை என்பவன்தான் தேனூரை மையமாக வைத்து ஆட்சி செய்த குறுநில மன்னன் ஆவான். அகுதையின் காலத்துக் கோட்டை அமைந்திருந்த இடமே தேனூரில் இன்றும் நடுக்கோட்டை என்று பெயர் வழங்கி வருகிறது. அந்த அகுதை

மன்னன் திருமாலின் சக்கரம் போன்ற ஒரு திகிரிப் படையை வைத்திருந்தான். அவன் பயன்படுத்திய களமே தேனூர் மைதானம் என்று வழங்கிவருகிறது என்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் முடிவாகும்.

## குறிப்புகள்

1. இராமலிங்கம் சேர்வை, தேனூர், பேட்டி கண்ட நாள் : 06.07.2004.
2. கா. அப்பாத்துரை (தமிழாக்கம்), ஆயிரத்தெண்ணூறு று ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். ப.45.
3. செந்தமிழ்ச் செல்வி, தொகுதி.93. நவம்பர் 1999, பகுதி.11, ப.408.
4. ஔவை சு. துரைசாமிபிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் விளக்கவுரையும், ப.157.
5. தேவநேயப் பாவாணர், பழந்தமிழாட்சி, ப.15.
6. மயிலை. சீனி வேங்கடசாமி, சங்ககாலத் தமிழக வரலாறு–2 (இரண்டாம் பகுதி), பக். 156–159.
7. மயிலை சீனி வேங்கடசாமி, சங்ககாலத் தமிழக வரலாறு–2, (இரண்டாம் பகுதி), ப.160.
8. வெ. வேதாசலம், மதுரை, பேட்டி கண்ட நாள்.07.07.2004.
9. தேவநேயப் பாவாணர், பழந்தமிழாட்சி, ப.16.
10. கா. கோவிந்தன், சங்ககால அரசர் வரிசை, ப.6.
11. மேலது, ப.5.
12. பத்மஜா ரமேஷ், பி.பி. புருஷோத்தமன் ஆகியோர், சங்ககால மன்னர்களின் காலநிலை, தொ.2, ப.17.
13. மேலது.
14. லேனா. தமிழ்வாணன், (பதி.ஆ).பாடல் வடிவில் மருதநாயத்தின் கதை (கான்சாகிபு சண்டைக் கதைப்பாடல்), ப. 19.

# ஆகமப் பொருள்

முனைவர் சுப. அண்ணாமலை
மதுரை.

செந்தமிழ் சனவரி இதழில், பெரும்புலவர் திரு. ப.அரங்கசாமி AYOLS , 'மாணிக்க வாசக' என்னும் தலைப்பில் பாடல் வடிவாகச் சில வேண்டுகோள்களைக் கூறியிருந்தார். அவற்றுள் முதலது,

'ஆகமம் ஆகிநின்றும் ஆகமம் தோற்றுவித்தும்
ஆகமம் வாங்கியும் என்றுரைந்தாய் ஐயன்நீ
ஆகமத்தின் பொருளாக அறிஞர் பலர் பலசொல்வர்
ஆகமத்தின் மெய்ப்பொருளை யானறிய
உணர்த்துவையே'.

என்பது இதில் உள்ள வினாவிற்கு, அறிஞர் உரையாட அல்லாவிடினும் எளிய உரையாக, விடை தெரிவிக்க முற்படுகின்றது இக்கட்டுரை.

சாத்திரம் பல. அவற்றுள் சமய நூலும் மெய்ந்நூலும் (தத்துவ சாத்திரம்) ஒரு சில. மெய்ந்நூல்களுள் முற்பட்டவை மறைகளும் ஆகமங்களும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதல் நூலாமே', எனத் தொல்காப்பியம் கூறிற்று. அவற்றைச் சிவபெருமான் கூறியருளினான் என்னும் கருத்தில், 'வேதமோடு ஆகமம் மெய்யாம்; இறைவன்நூல்' [1] என்றார் திருமூலர்.

இது புராண மரபில் எழுந்த உபசார வழக்கு. மாணிக்க வாசகர் இம்மரபைப் பின்பற்றி, "மகேந்திர மகனில் சொன்ன ஆகமம்"[2] என்றும், "கேவேடராகிக் கெளிறது படுத்தும் மாவேடம் ஆகிய ஆகமம் வாங்கியும்" [3] என்றும் பாடினார். திருமூலர் ஆகமம் இருபத்தெட்டு என்றும், அவற்றைச் சிவபெருமான் தன் ஐந்து

1. திருமந்திரம் : மா.வை. விசுவநாதபிள்ளை பதிப்பு, பா. 2397.
2. திருவாசகம் : கீர்த்தித் திருவகவல், அடி 9-10.
3. மேலது : அடி 17-18

முகங்களால் முனிவர், தேவர் ஆகியோருக்குக் கூறியருளினான்[4] என்றும் கூறினார். மறையிலும் ஆகமத்திலும் சிவபெருமான் தன்னைப் பற்றி அறிவித்தான். திருஞானசம்பந்தர்,

"சொற் பிரிவிலாத மறையிழ் நடமாடுவர்
(தொல் ஆணை உரிவை)
மற்புரி புயத்து இனிது மேவுவர் எந்நாளும்
(வளர் வாணவர் தொழத்)
துற்பரிய நஞ்சு அமுதமாக முன் அயின்றவர்
(இயன்ற தொருசீர்)
வெற்பரையன் மங்கை ஒரு மங்க; நகர்
(என்பர் திருவேதிகுடியே)"

என்றும் பாடலில் சிவபெவருமானைப் பற்றி அறிவிக்கின்றார்.[5]

இந்நூல்கள் சொற்பொருளால் இறைவனைப் பற்றி அறிவிக்கின்றன. சொற்பொருள் கருத்துப் பொருளாகும். ஒரு சொல்லின் கருத்தைக் கொண்டு, ஒரு பொருளைப் பற்றி ஊகித்து உணர்வது கருத்துப் பொருள் அவ்வாறு அன்றிப் பொருளையே நேரிடையாக அறிவது, புலப்பொருள் ஆகும். கத்திரிக்காய் என்னும் சொல்லை அறிந்தவுடன், அஃது உருண்டையாகவோ, நீள் உருண்டையாகவோ இருக்கும். சதையும் விதையும் இருக்கும். காம்பு இருக்கும். புறந்தோல் போர்த்திருக்கும் என அப்பொருளைப் பற்றி ஊகித்து, அறிகின்றோம். ஆகவே, அது கருத்துப்பொருள். கத்திரிக்காயைச் சமைத்து உண்கிறோம். அப்பொழுது, அது சுவைப்புலனுக்கும் பொருளாகின்றது. ஆகவே, அது புலப்பொருள்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றும் தொல்காப்பியம் கருத்துப் பொருளையே குறித்தது. மறையும் ஆகமமும் சொல்லால் பொருளைப் பற்றி உணர்த்துவன ஆதலின், கருத்துப் பொருளையே கூறின.

---

4. திருமந்திரம் : பா. 67.
5. திருஞானசம்பந்தர் தேவாரம் : 3ஆம் திருமுறை. திருவேதிகுடி.

மேலே "மகேந்திர மதனில் சொன்ன ஆகமம்" என்றும் "மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்" என எடுத்துக் காட்டியவை, ஆகமம் கருத்துப் பொருளை உணர்த்துவதையே குறிக்கும்.

ஆயின், மாணிக்கவாசகர், "வந்து இங்கு ஆட்கொண்ட தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, சிவனே" [6] எனப் பாடுவது, புலப்பொருள்.

எனவே பொருளைப் பற்றி அறிவது கருத்துப் பொருள்; பொருளையே அறிவது புலப்பொருள். மாணிக்க வாசகர் சிவபெருமானைக் கருத்துப் பொருளாக அன்றிப் புலப்பொருளாக உணர்ந்தார். அதனை, "ஐம்புலன்கள் ஆர வந்தனை" என்று விளியினால் புலப்படுத்துகின்றார்.

சிவனைக் "கண்முதற் புலனாய் காட்சியும் இல்லோன்"[8] என்றும் "சொற்பதம் கடந்த தொல்லோன்" [9] என்றும் கூறியவர், "கண்ணால யானும் கண்டேன்" [10] என்றும் "சிவன் என யானும் தேறினன்" [11] என்றும் அவர் பாடுகின்றார். சிவன் அந்தக் கரணம் ஆகிய புத்திக்கும், சொல்லுக்கும் எட்டாதவன் என்று இவ்வடிகளில் கூறுகின்றார். "சித்தமும் செல்லாச் சேட்சியன்" [12] என, மற்றோர் அந்தக் கரணம் ஆகிய சித்தத்துக்கும் எட்டாதவன் என்றார். சேட்சி, தொலைவு.

இவை முரண் அல்ல. காண இயலாத சிவன் அருவம். கண்ட சிவன் உருவம், திருப் பெருந்துறையில், குருவாக வந்தவர். தம் அடிகளை மாணிக்கவாசகர் தலையில் வைத்தார். அஃது உருவக்காட்சி. அடிகளை வைத்த அளவிற், "எண்ணுதற்கு எட்டா

---

6. திருவாசகம். திருச்சதகம். பா. 55.,
7. திருவாசகம் : திருச்சதகம். பா. 26.
8. மேலது : திருவண்டப்பகுதி. அடி - 113.
9. மேலது : அடி-112.
10. மேலது : அடி-57
11. மேலது : அடி-62.
12. மேலது : அடி-41

எழிலார் கழல் இறைஞ்சி, அக்கழலுக்கு உரியவனை 'விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய், எண் நிறைந்து எல்லை இலாதானே[13] என விளித்துப் பாடுவது அருவக் காட்சி.

சிவபெருமான் உருவமும் அருவமும் உடையவன். அருவுருவமும் உடையவன். இம்மூன்றுமாக நிற்றவன், அவனைச் 'சொரூபம்' என்றனர். சொரூபமே, அருவமாகக் காட்சி தந்தது.

அருவக் காட்சி, உன் உணர்வால் காண்பது. அதனை 'அகத்தில் கண்கொண்டு காண்டல்' என்பர் திருமூலர். இவற்றுள், குருவாகக் கண்ட காட்சியை, 'அந்தணனாவதும் காட்டி, வந்து ஆண்டாய், நிலந்தன்மேல் வந்தருளி, நீள் கழல்கள் காட்டி நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'[14] என்று பாடுகின்றார்.

இவற்றுள், 'கழல்கள்' என்றது, அருவத்தில் உணர்ந்தவற்றை திருவாசகம் முழுவதும் கழல் என வருவது இறைவனின் அருவக் காட்சியேயாகும்.

மாணிக்க வாசகர் தமக்குக் குருபிரானாக வந்தவர் சிவபெருமானே என்று உணர்ந்தவர், என்று மேலே குறிக்கப்பட்டது. ஆகவே, அவர் ஊரூராக அலைந்து தேடியும் காணாது, இணைந்தது. அருவமாகிய கழல்களையே. "நிருந்தனே நிமலா நீற்றனே நெற்றிக் கண்ணனே விண்ணுடுளார் பிரானே ஒருத்தனே உன்னை ஓலமிட்டலறி உலகெலாம் தேடியும் காணேன்"[15] என்று, அவர் குருபிரானைத் தேடவில்லை திருப்பெருந்துறைக்கும் பின்னர், எத்தலத்திலும் அவருக்குக் குரு தோன்றியதற்குச் சான்று இல்லை.

---

13. திருவாசகம் : சிவபுராணம், அடி-24
14. மேலது : அடி 58-61

நெடுகிலும் தேடியபின்னர், திருக்கழுக்குன்றத்தில் அருவக் காட்சியைக் கண்டமையைப் பாடுகின்றார். அதனைத் 'துயக்கு அறுத்து கிளை ஆண்டு கொண்டு, நின் தூயம் மலர்க் கழல் தந்து எனைக் கயக்க வைத்து அடியார் முன்னே வந்து காட்டினாய் கழக்குன்றியே'[16] என்றும், 'கணக்கு இலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றியே''[17] என்றும் பாடுகின்றார்.

உருவக் காட்சியைக் கண்டு இன்பம் நுகர்தல் போல, அருவக் காட்சியிலும் இன்பம் பெற முடியும். உருவக் காட்சி மன உணர்விற்கு இன்பம் நல்குவது. அருவக் காட்சி உயிருணர்விற்குப் பேரின்பம் நல்குவது. அதனை, நினைத்தொறும் கண்டொறும் பேசுந்தொறும் எப்போதும் அனைத்தெலும்பு உள்ளது. 'ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையான்' என்று பாடுகின்றார். குனிப்பு, ஆடல் இந்த ஆடல் சிவபெருமான் ஞான மயமாக நின்று நிகழ்த்தும் ஐந்தொழில் ஆடலாகும்.

இதனை ஆகமம் ஆகமத்துப் பொருளாகக் கூறும். மணிவாசகர், இறைவனோடு நெருங்கி நின்று, மூலப்பொருளாக உணர்ந்தார். அதையே, ஆகமமாகி நின்று அண்ணிப்பான்□என்று பாடுகின்றார்.

எனவே, ஆகமப் பொருள், அஃது எய்துவிக்கும் புலப்பொருளே ஆகும்.

---

15. திருவாசகம், அருட்பத்து. பா.2

16. திருவாசகம், திருக்குன்றப்பதிகம்.பா.7

17. திருவாசகம், திருக்கழுக்குன்றம்.பா.1

# தமிழில் முதல் டாக்டர் பட்டம் பெற்ற சாஸ்திரி

பேராசிரியர் அ. காமாட்சிநாதன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சாஸ்திரி தொல்காப்பியத்தைத் தமிழ் மூலத்தோடு ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளார். ஆனால் இவர்கள் மொழியாக்கம் செய்த முறைக்கும் சாஸ்திரி தொல்காப்பியத்தை மொழியாக்கம் செய்த முறைக்கும் ஒரு பெரும் வித்தியாசம் உண்டு. சாஸ்திரி தொல்காப்பியத்தை தமிழ் மூலத்தோடு ஆங்கிலத்தில் மொழியாக்கம் மட்டும் செய்யவில்லை. அதனோடு தமிழ் மூலத்தை ஆங்கில எழுத்துக்களிலும் தந்தார். இந்த வசதி போப் போன்றவர்களின் மொழிபெயர்ப்புகளில் இல்லை.

1980ம் வருடம் மே மாதம் 3ம் தேதி கோயம்புத்தூரில் உள்ள ஒரு மாபெரும் அரங்கில் தமிழகப் புலவர் குழுவிற்கு வரவேற்புக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் பேசிக் கொண்டுவரும் போது, 'தொல்காப்பியத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் நமது புலவர் குழுவில் உறுப்பினராக இருந்த இலக்குவனார்தான்' என்று உரத்த குரலில் முழக்கமிடுகிறார். கூடியிருந்தவர்களெல்லோரும் கைத்தட்டி ஆரவாரம் செய்கின்றனர். ஆனால் ஓர் உறுப்பினர் மட்டும் முகத்தைச் சுளிக்கிறார். பிறகு கூட்டம் முடிகிறது. உடனே அந்த உறுப்பினர் மேடையை நோக்கி விரைந்து போய் பொள்ளாச்சி ந.மகாலிங்கம் பக்கத்தில் நின்று கொண்டிருந்த கி.ஆ.பெ.விசுவநாதத்திடம் 'தொல்காப்பியத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் இலக்குவனார் அல்ல !.. என்று சொல்கிறார். பிறகு கீழ்வரும் உரையாடல் தொடர்கிறது.

***"இலக்குவனார் இல்லாவிட்டால் வேறு யார்?"***

*இலக்குவனாருக்கே தமிழ் சொல்லிக் கொடுத்த ஒரு வடமொழிப் பேராசிரியர்!.*

*"அவர் யார்?"*

*"அவர்தான் மறைந்த டாக்டர் பி.எஸ்.சுப்ரமணிய சாஸ்திரி!"*

*"அப்படியா? இந்தச் செய்தி இதுவரை எனக்குத் தெரியவில்லையே!"*

ஆம்! இந்தப் பேருண்மை கி.ஆ.பெவுக்கு மட்டுமல்ல; தமிழ்ப்பேராசிரியர்கள் பெரும்பாலருக்கே தெரியாத பரம ரகசியமாகும்.

1890ம் ஆண்டில் பிறந்த டாக்டர் பி.எஸ்.சுப்ரமணிய சாஸ்திரி, முதன் முதலாக தொல்காப்பிய ஆங்கில மொழி பெயர்ப்பை மட்டும் செய்யவில்லை. தமிழ்மொழியின் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றையும் ஆய்வுத்துணைவர் இல்லாமல் முதன் முதலாகத் தானாகவே எழுதிச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கொடுத்து தமிழ்ப் பிரிவில் முதன்முதலாக டாக்டர் பட்டமும் சாஸ்திரி பெற்றார். என்பதும் பெரும்பாலான தமிழறிஞர்களுக்குத் தெரியாத செய்தியாகும். இதனால் தமிழுலகில் முதன் முதலாக டாக்டர் பட்டம் பெற்றவர் நமது சாஸ்திரியே என்பது வெள்ளிடைமலையென விளங்கும்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பின்னங்குடியில் சுவாமிநாத சாஸ்திரி, மங்களாம்பிகை தம்பதிகளுக்குத் தலைமகனாக சாஸ்திரி 1890ல் ஜூலை மாதத்தில் பிறந்தார். சாஸ்திரி தனது பள்ளிப்படிப்பு முழுவதையும் திருச்சியில் உள்ள தேசிய உயர்நிலைப்பள்ளியில் படித்து முடித்தார்.

சாஸ்திரி வசதியுள்ள குடும்பத்தில் பிறக்கவில்லை. அதனால் அவரது கல்லூரிப் படிப்பு பல இடையூறுகளுக்கு உட்பட்டே நடந்தேறியது.

ஏற்கனவே காசிப் பல்பலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியராக இருந்து வந்த சின்னசுவாமி சாஸ்திரிகள் மற்றும் சென்னை மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் குப்புச்சாமி சாஸ்திரி போன்ற சமஸ்கிருத மேதைகளிடமும் படிக்கப்பெற்ற சமஸ்கிருத அறிவுடன், கல்லூரியில் ஆங்கிலேயர்கள் சொல்லிக் கொடுத்த இந்தோ-ஐரோப்பிய மொழிநூல் விஷயங்கள் ஆகியவற்றையும் சேர்த்துக் கொண்டு தமிழில் உள்ள தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்களையும் அவற்றுக்கு எழுதப்பட்ட இளம்பூரணார், நச்சினார்க்கினியர் முதலியோரின் உரைகளையும் படித்துத் தனது தமிழ்ப்புலமையைப் பெருக்கிக் கொண்டார். இதனோடு டாக்டர் கால்டுவெல் எழுதிய திராவிட ஒப்பிலக்கணத்தையும் படித்து திராவிட மொழிகளின் அமைப்பையும் சாஸ்திரி அறிந்து கொண்டார். இங்கனம் பெற்ற தனது சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப்புலமை மூலம் சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன் முதலிய இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் தமிழ் மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்து தனது கல்லூரி அண்டு மலர்களில் பத்தாண்டுகளாக எழுதி வந்தார். சாஸ்திரி. இதனால், சாஸ்திரியின் மேதாவிலாசம் சென்னையிலுள்ள அறிஞர்களுக்-கெல்லாம் தெரியலாயிற்று.

சாஸ்திரி தமிழ் லெக்சிகன் அலுவலகத்தில் வேலை பார்க்க வந்த போது லெக்சிகன் அலுவலகத்தில் தமிழ், கல்வெட்டு, சமஸ்கிருதம் முதலிய துறைகளில் ஜாம்பவான்களாக இருந்த மு.ராகவையங்கார், வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் முதலியவர்கள் ஏற்கனவே வேலை பார்த்து வந்தார்கள். அவர்களுடைய கூட்டுறவினால் தொல்காப்பியம், நன்னூல் முதலிய தமிழிலக்கணங்களையெல்லாம் சாஸ்திரி படித்துப் படித்து தனது தமிழ் இலக்கண அறிவைப் பெருக்கிக் கொண்டார். சாஸ்திரி, தமிழிலக்கணங்களைப் படித்த போது, அச்சான இளம்பூரணார்,

நச்சினார்க்கினியர் முதலியவர்களின் உரைகளோடு அச்சில் வராத கல்லாடர், தெய்வச்சிலையார் முதலிய பிற உரையாசிரியர்களின் உரைகளையும் ஏட்டுச்சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள் ஆகியவற்றின் மூலமாகவும் படித்து ஆழ்ந்த புலமை பெற்றார். அதோடு நிற்கவில்லை.

போக்குவரத்து வசதிகளும் பிற லாட்ஜ், உணவு விடுதி முதலிய வசதிகளும் இல்லாத அந்தக் காலங்களில் மதுரைக்கு வந்து அங்கே சேதுபதி வம்சத்தைச் சேர்ந்த பாண்டித்துரைத்தேவர் அமைத்திருந்த நான்காம் சங்கமாகிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இலக்கணப் புலியாக விளங்கி வந்த திரு.நாராயணையங்காரிடம் தமிழிலக்கணங்களைப் படித்தும் விவாதித்தும் இலக்கணங்களில் உள்ள பல சந்தேகங்களைப் போக்கிக் கொண்டார். அதன் பிறகும் சாஸ்திரி சும்மா இருக்கவில்லை. மதுரையிலிருந்து கிழக்கே உள்ள ராமநாதபுரம் சென்றார். அங்கே சேதுபதி சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்வானாக விளங்கி வந்த மகாவித்வான் ரா.ராகவையங்காரிடம் தமிழிலக்கணங்களைப் படித்தார். பல சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றார்.

சாஸ்திரியை நோக்க ராகவையங்கார் போன்றவர்கள் பதவியளவில், ஆங்கிலப் படிப்பளவில் சாஸ்திரிக்குச் சமமானவர்கள் இல்லை என்றாலும் சுயகவுரவம் எதையும் கவனிக்காமல் அறிவு பெறுவது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு உடல் கஷ்டம், பொருள் நஷ்டம் முதலிய பல துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு ஒரு விஞ்ஞானி போல தமிழைப் படித்துத் தனது புலமையைப் பெருக்கிக் கொண்டார் சாஸ்திரி. இந்த விஷயத்தில் சாஸ்திரிக்கு நிகராக யாரையும் சொல்ல முடியாது.

இங்ஙனம் சமஸ்கிருதத்திலும், இந்தோ–ஐரோப்பிய மொழிகளிலும், தமிழிலும் இலக்கண உலகில் பெற்ற புலமையோடு ஜெர்மன் மொழியிலும் பிரெஞ்சு மொழியிலும் சாஸ்திரி ஓரளவுக்கு பரிச்சயம் அடைந்தார். இத்தகைய பலமொழிப்புலமையை வைத்துக்

கொண்டு எந்தப் பேராசிரியரையும் மேற்பார்வையாளராகக் கொள்ளாமல் தானாகவே ஆராய்ச்சி செய்து முதன் முதலாக ‘தமிழிலக்கணக் கொள்கைகளின் வரலாறும் அவற்றுள் சமஸ்கிருத இலக்கணங்களோடு உள்ள தொடர்பும்’ என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை சென்னைப் பல்கலைக் கழகத்தில் சாஸ்திரி சமர்ப்பித்தார்.

அந்த ஆய்வோடு அக்காலத்தில் பிரசித்திப் பெற்ற ஆர்.எல்.டர்னர், எல்.டி.பார்னட் (இங்கிலாந்து) யூல் பிளாக் (பிரான்ஸ்) ஆகிய பேராசிரியர்களின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அவர்கள் மூவருமே ஒரு சேர இந்த ஆய்வேட்டைப் புகழ்ந்து டாக்டர் பட்டம் வழங்கலாம் என்று சிபாரிசு செய்து விட்டார்கள். இதனால் 1930ல் சாஸ்திரிக்கு டாக்டர் பட்டம் கிடைத்துவிட்டது.

முன்பு சொன்னது போல தமிழில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அதுவும் தமிழ்மொழி வரலாற்றில் முதன் முதலாக டாக்டர் பட்டம் பெற்றது நமது சாஸ்திரி தான். இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டிலேயே முதன் முதல் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் சாஸ்திரியேதான்.

சாஸ்திரியின் ஆய்வுக்கட்டுரை உண்மையில் தமிழ்மொழியின் இரண்டாயிரம் ஆண்டுகள் வரலாற்றைக் கூறுவதாகும். இத்தகைய மொழி வரலாறு திராவிட மொழிகளில் தமிழ் ஒன்றுக்கு மட்டுமே வந்துள்ளது. தமிழ்மொழிக்கு இந்த வரலாற்று நூலிற்குப் பிறகு 30 ஆண்டுகள் கழித்தே மற்றொரு வரலாறு வந்தது. ஆனால் சாஸ்திரியின் தமிழ் வரலாற்றுக்குப் பின் வந்த தமிழ் வரலாற்றுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாகும். தமிழ்மொழி வரலாற்றில் சாஸ்திரியின் ஆய்வு நூல் ஒரு திருப்பு முனையாகும்.

சொல்லதிகாரத்திற்கு நச்சர், சேனாவரையர் முதலிய பிறர் எழுதிய உரைகளை ஒப்பிட்டு தாமும் ஓர் உரை எழுதி அவற்றை முதலில் மதுரைத் தமிழ்ச்சங்கம் பிரசுரித்து வந்த செந்தமிழ்ப் பத்திரிக்கையில் தொடர்ந்து எழுதினார். பிறகு அவற்றையெல்லாம்

தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டார். அந்தச் சொல்லதிகாரக் குறிப்புரை மகா வித்வான் ரா.ராகவையங்காரால் பெரிதும் பாராட்டப்பட்டது. இது 'வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி' என்ற பட்டம் வாங்கியதற்குச் சமமாகும். ராகவையங்கார் பாராட்டியதோடு இதே போன்ற எழுத்ததிகாரத்திற்கும் சாஸ்திரி விரிவுரை எழுத வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சாஸ்திரியும் பிற்காலத்தில் அவ்வாறே எழுத்ததிகாரத்திற்கும் குறிப்புரை எழுதினார்.

சாஸ்திரி தொல்காப்பியம் முதலிய தமிழிலக்கணங்களை ஆய்ந்து ஆங்கிலத்தில் தமிழ் வரலாறு எழுதியதின் பலனாகத் தொல்காப்பியத்தையே முதன் முதலாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடத் தொடங்கினார். அந்த வகையில் 1930ல் எழுத்ததிகாரத்தையும் பிற்காலத்தில் சொல், பொருள் ஆகிய அதிகாரங்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார். இவரைப் போலவே இவர்க்கு முன்னால் போப் போன்ற ஆங்கிலேயர்கள் திருக்குறள், திருவாசகம் போன்ற தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளார்கள். ஆனால் அவர்கள் மொழியாக்கம் செய்த முறைக்கும் சாஸ்திரி தொல்காப்பியத்தைத் தமிழ் மூலத்தோடு ஆங்கிலத்தில், மொழியாக்கம் மட்டும் செய்யவில்லை. அதனோடு தமிழ் மூலத்தை ஆங்கில எழுத்துக்களிலும் தந்தார். இதனால் தமிழ் எழுத்துக்களைப் படிக்க முடியாத பிறமொழியறிஞர்கள், குறிப்பாக ஆங்கிலேயர்கள் தமிழ் மூலத்தையும் படிப்பதற்கு மிகவும் மிகவும் வசதி ஏற்பட்டது. இந்த வசதி போப் போன்றவர்களின் மொழிபெயர்ப்புக்களில் இல்லை.

சாஸ்திரியின் தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பு ஏ.பி.கீத், ஆர்.எல்.டர்னர், பெடர்சன், ஸ்டென் கொனா, ப்ளும்பீல்டு முதலிய மேனாட்டறிஞர்களால் பெரிதும் வரவேற்றுப் பாராட்டப்பட்டது.

தமிழ் சமஸ்கிருதம் ஒப்பிட்டாய்வினால் பெற்ற முதல் டாக்டர் பட்டம், தொல்காப்பிய உரை விளக்கம், தொல்காப்பிய ஆங்கில மொழிபெயர்ப்பு முதலியவற்றின் மூலமாக சாஸ்திரியின் அதி மேதாவிலாசம் தமிழ்நாடு முழுவதும் தெரியலாயிற்று.

சாஸ்திரி திருவையாற்றில் முதல்வராக இருந்த போது பல அரிய நூல்களை வெளியிட்டார். அவற்றில் மிகமிக முக்கியமானது. அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரையாகும். அது இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

சாஸ்திரியின் நூல்களில் எல்லாம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழிற்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையே இருந்து வருகின்ற ஒட்டுதலையும் உறவையும் சாஸ்திரி வெளிப்படுத்தி-யிருந்தார். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாட்டில் ஒப்பிலக்கியத் துறைக்கே பிள்ளையார்சுழி போட்டவரே சாஸ்திரிதான் என்று சொல்லவேண்டும். இவரது தமிழ், சமஸ்கிருத ஒப்பிலக்கிய இலக்கண ஆய்வைக் கண்ட ஒரு சில தமிழன்பர்கள், குறிப்பாகத் தஞ்சாவூர்த் தமிழன்பர்களில் சிலர் சாஸ்திரியின் மீது கோபப்படத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் ஒரு சமயம் தமிழ்த்தென்றல் திரு.வி.க.வை சாஸ்திரி அவர்கள் தனது கல்லூரிக்குப் பேச அழைத்தபோது தஞ்சை தமிழன்பர்கள் தடுத்த போதிலும் திரு.வி.க. சாஸ்திரியின் கல்லூரிக்குச் சென்றார். சாஸ்திரியின் தலைமையிலேயே பேசினார். தலைமை வகித்த சாஸ்திரி, திரு.வி.கவின் ஒரு கருத்தைக்கூட மாற்றியோ எதிர்த்தோ பேசவில்லை. அது மட்டுமல்ல, சாஸ்திரி சகோதர பாசத்துடனும் திரு.வி.க.விடம் நடந்து கொண்டார். இதனைத் திரு.வி.கவே தனது வாழ்க்கை வரலாற்றில் பல ஆண்டுகளுக்குப்பின் குறிப்பிட்டு உள்ளார்.

பின்பு 1942ல் சாஸ்திரி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியராகச் சேர்ந்தார். இவரது மேதா விலாசத்தை

அறிந்த துணைவேந்தரும் பிறரும் இவரை மிகவும் கவுரவமாக நடத்தினார்கள். இங்கே சமஸ்கிருதப் பேராசிரியராக இருந்து கொண்டே 'ஹிஸ்டாரிகல் டமில் ரீடர்' என்றதொரு ஆங்கிலப் புத்தகத்தை எழுதினார். இது ஒரு சுருக்கமான தமிழ்மொழி வரலாறாகும். இதனை வங்காளமொழிப் பேராசிரியரான சுநீதிகுமார் சட்டர்ஜி பெரிதும் ஆதரித்துப் பாராட்டினார். அடுத்து தொல்காப்பியச் சொல்லதிகாரம் ஆங்கிலத்தில் சாஸ்திரியால் எழுதி வெளிவந்தது. பிறகு சாஸ்திரி வடமொழி இலக்கிய வரலாற்றை எழுதினார். இவையெல்லாம் பல்கலைக்கழகமே வெளியிட்டது. பிறகு சாஸ்திரியே தொன்யாலோகம் என்ற சமஸ்கிருத அலங்கார சாஸ்திரத்தை, 'தொனிவிளக்கு' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்து வெளிவரச் செய்தார். இதற்கிடையே திருவாங்கூர்ப் பல்கலைக்கழகத்தின் அழைப்பிற்கிணங்க அங்கே சென்று தமிழிற்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையே உள்ள இலக்கண இலக்கிய ரீதியான ஒப்புமைக் கருத்துகளைப் பற்றி உரையாற்றினார். அந்த உரையும் உடனே அந்தப் பல்கலைக் கழகத்தினால் அச்சிடப்பட்டது. அதற்கு அப்போது அங்கே திவானாக இருந்த சர்.சி.பி.ராமசாமி அய்யர் சிறந்த பாராட்டுரை எழுதித்தந்தார்.

சாஸ்திரி தமிழிற்கு மட்டுமல்ல, சமஸ்கிருதத்திற்கும் பல அரிய நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் மிகமிகச் சிறந்தவை, பாணினியின் உலகப் புகழ்ப்பெற்ற 'அஷ்டாத்யாயி' என்ற சமஸ்கிருத இலக்கணத்திற்குப் பதஞ்சலிமகான் எழுதிய மகாபாஷ்யம் என்ற உரைக்கு சாஸ்திரி ஆயிரக்கணக்கான பக்கங்களில் எழுதிய விரிவுரைகளே, இந்த விரிவுரைகள் மொத்தம் 14 தொகுதிகள். இவற்றில் முதல் ஆறு தொகுதிகளை சாஸ்திரி, தனது வாழ்நாளிலேயே வெளியிட்டுவிட்டார். மிஞ்சிய 8 தொகுதிகளும் பணமின்றி இன்னும் வெளியிடாமலே இருக்கின்றன.

1947ல் சாஸ்திரி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றதும் அவருக்கு ஒரு கோலாகலமான பிரிவுபசார விழா நடந்தது. பின்பு சாஸ்திரி திருவையாற்றுக்குத் திரும்பினார்.

ஓய்வு பெற்றபின் காஞ்சிகாமகோடிப் பெரியவர் ஆலோசனைப்படி திருவையாற்றிலேயே தங்கித் தனது தமிழ்–சமஸ்கிருத ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். ஓய்வு பெற்றபின்னர்' தமிழ் ஒப்பிலக்கணம்' என்றதொரு ஆங்கில நூலை வெளியிட்டார். இது ஒரு குட்டித் திராவிட ஒப்பிலக்கணமாகும். மேலும், 'இந்து மத வினா–விடை' 'திருக்குறள் பாலர் உரையின் பிற்பகுதிகள்' 'வடமொழி வரலாறு' முதலிய தமிழ் நூல்களும் மற்றும் பல சமஸ்கிருத ஆராய்ச்சி நூல்களும் சாஸ்திரியால் இக்கால கட்டத்தில் எழுதப் பட்டன.

சாஸ்திரி சமஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தெரிந்த மும்மொழிப் பேரறிஞராக இருந்ததினால் காஞ்சிகாமகோடி பீடம், சாஸ்திரிக்கு "வாணி திரிவேணி பிரயாக்" என்ற பட்டத்தைக் கொடுத்தது. கர்நாடக மாகாணத்திலிருந்து 'வித்யா ரத்னம்' என்ற பட்டமும் சாஸ்திரிக்கு வந்து சேர்ந்தன.

"அதிகமாகப் படித்தவர்கள் தமக்குச் சமமாகப் படித்தவர்களைப் பொறாமையினால் அவ்வளவாக மதிப்பதில்லை" இந்த புறக்கணிப்பின் காரணமாக 1970க்குப் பிறகு சாஸ்திரி எழுதுவதையே நிறுத்திவிட்டார். அதோடு வெளியிட முடியாமல் இருந்த மகாபாஷ்யப் பேருரைகளின் 8 தொகுதிகளையும் விற்பதாகக்கூட விளம்பரம் செய்து பார்த்தார். பலனில்லை. அந்த ஏக்கத்திலேயே மேலும் ஏழு வருடங்கள் வாழ்ந்துவிட்டு 1978ம் வருடம் மே மாதத்தில் சாஸ்திரி இந்த உலகிலிருந்து மறைந்தார். அவரால் வெளியிட முடியாத பிற தமிழ் நூல்களையும் மகாபாஷ்யப் பேருரைகளையும் வெளியிடுதல், அவர் வெளியிட்ட புத்தகங்களை மீண்டும் வெளியிடுதல் ஆகியவையே சாஸ்திரிக்குத் தமிழுலகம் தற்போது செய்ய வேண்டிய நன்றிக் கடனாகும்.

# இடக்கரடக்கல்

க. தண்டபாணி

வீரசோழபுரம், கள்ளக்குறிச்சி வட்டம்,

விழுப்புரம் மாவட்டம்.

செந்தமிழ் இலக்கணத்தில் தகுதி வழக்கு மூன்று வகைப்படும். அவற்றுள்ள ஒன்றே இடக்கரடக்கல் ஆகும். இடக்கர் – சொல்லத்தகாத சொல். அடக்கல் – மறைத்தல். சொல்லத்தகாத சொற்களை மறைத்து தகுந்த பிற சொற்களால் பொருளைத் தெரிவிப்பது இடக்கரடக்கல் ஆகும். இடக்கரடக்கலை தொல்காப்பியம் அவையல் கிளவி என்று கூறியுள்ளது. அவை – சபை அல் – இருள்.

“அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்” – (தொல் – சொல் – 442)

நன்னூல் விருத்தியுரை இடக்கரடக்கலை கீழ்க்கண்டவாறு வரையறை செய்துள்ளது.

‘நன்மக்களிடத்தே சொல்லத்தகாத சொல்லை அவ்வாய்பாடு மறைத்து பிற வாய்பாட்டாற் சொல்வது – நன்னூல் – 262 – விருத்தியுரை.

தலைக்குறை நிமலம் என்ற தொடர் சொல்லத்தகாத ஒரு சொல்லைக் குறிக்கிறது. நிமலம் என்ற சொல்லில் முதல் (தலை) எழுத்தை (நி) நீக்க சொல்லத்தகாத அச்சொல் கிடைக்கும். அச்சொல்லையே அவ்வையார் தலைக்குறைக் கமலம் என்ற தொடரால் மறைத்துக் கூறியிருப்பது இடக்கரடக்கலுக்காகவே.

‘ ‘இலக்கண கவிஞர் சொல் இன்பம் தேடுவர்
மலக்கு சொல் தேடுவர் வன்கணா ளர்கள்
நிலத்துறும் கமலத்தைத் தேடும் வண்டதுஈ
தலைக்குறைக் கமலத்தைச் சாரும் தன்மைபோல்’ ’

– அவ்வையார்

பகர ஈகாரம் என்ற தொடர் சொல்லத்தகாத ஒரு சொல்லை குறிக்கிறது. பகரமெய்யும் (ப்) ஈகாரமும் (ஈ) புணர சொல்லத்தகாத அச்சொல் கிடைக்கும். அச்சொல்லை நன்னூல் பகர ஈ என்று மறைத்துக் கூறியிருப்பது இடக்கரடக்கலுக்காகவே.

**' 'ஆமுன் பகரவீ யனைத்து வரக்குறுகும்**
**மேலன வல்வழி யியல்பா கும்மே' ' – (நன்னூல் – 177)**

இந்நூற்பாவில் ஆமுன் பகர ஈ என்பது பசுச்சாணத்தைக் குறிக்கிறது. ஆ – பசு சொல்லத்தகாத அதே சொல்லை நன்னூல் அடுத்த நூற்பாவில் பவ்ஈ என்று மறைத்துக் கூறியுள்ளது.

**' 'பவ்வீ நீமீ முன்ன ரல்வழி**
**இயல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே ' '– (நன்னூல் – 178)**

நீ, மீ, எழுத்துக்களை நேரடியாகக் கூறிய நன்னூல் சொல்லத்தகாத அந்த சொல்லை மட்டும் பவ்ஈ என்று மறைத்து கூறியிருப்பது இடக்கரடக்கலுக்காகவே அதே சொல்லை தொல்–காப்பியம் இடக்கர் பெயர் என்ற தொடரால் மறைத்துக் கூறியுள்ளது.

**நீஎன் பெயரும் இடக்கர் பெயரும்**
***மீஎன் மரீஇ-த் தியற்கை யாகும் – (தொல் எழுத்து – 251)***

நன்னூல் போலவே தொல்காப்பியமும் நீ, மீ எழுத்துக்களை நேரடியாக்கச் சொல்லியுள்ளது. ஆனால் சொல்லத்தகாத அந்தச் சொல்லைமட்டும் இடக்கர் பெயர் என்று மறைத்துக் கூறியிருப்பது இடக்கரடக்கலுக்காகவே.

இடக்கரடக்கலுக்கு எடுத்துக்காட்டாக கால் கழுவி வந்தான் என்ற தொடரையே சொல்லிச் சொல்லி அலுத்துவிட்டோம் இனியாவது இதுபோன்ற புதிய எடுத்துக்காட்டுகளைச் சொல்லுவோமாக.

சொல்லத்தகாத சொற்களை மறைத்து தகுந்த பிற சொற்களால் தெரிவிப்பதற்கு ஓர் இலக்கணம். அதன் பேர் இடக்கரடக்கல். அடடா ! என்னே தமிழரின் ஒழுக்கம்! அதனால்தான் தமிழரின் பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் உலகளவில் போற்றப்படுகிறது.

# சங்க இலக்கிய ஆய்வுத்தளங்கள்

உ.சண்முகநாதன்
முனைவர் பட்ட ஆய்வாளர்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

## முன்னுரை

"பழம்போலும் சங்கப் பனுவலைக் கற்றால்
கிழம்போகும் கீழ்மைப் போம்"

என்பார் மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார், 'நூலைப்படி' என்பது பாவேந்தர் பாரதிதாசனின் கூற்றாகும். இவ்வாறு அறிஞர்களால் ஆய்ந்து அறிந்து வெளிக்காட்டப்பட்ட சங்க இலக்கியங்கள் தமிழினத்தின் அசையாச் சொத்து. மேலும், தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தமிழினத்தின் உயிர் நூலாகக் காணப்படுபவை. சங்க இலக்கிய ஆய்வு எனும் போது, நமக்கு தொல்காப்பியம் பிள்ளையார் சுழியாக அமைகிறது என்றால் மிகையாகாது. இக்கால கட்டத்தில் செவ்வியல் தமிழின் ஆய்வுகள் எவ்வாறு விரிந்தும் பரந்தும் கிடக்கின்றன. இனி நாம் அதனை எங்கு எப்படி எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

## தேடிக்கிடைத்த செல்வங்கள்

சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படும் தொகையும் பாட்டும் ஒலைச் சுவடியில் எழுதப்பட்டவை. இவைகள் ஓரிடத்தில் கிடத்தவை அல்ல; ஊர் ஊராக அலைந்தும், வீடு வீடாகத் திரிந்தும் சேகரிக்கப்பட்ட செல்வங்கள். அத்தகைய மதிப்புமிக்க தமிழ்ச் செல்வத்தைப் பொறுக்கி எடுத்த பெருமை உ.வே. சாமிநாதையரைச் சாரும். ஏட்டுச் சுவடிகளை பதிப்புக்கும் பணியை, ஆறுமுக நாவலர் (1822–1872), சி.வை. தாமோதரன் பிள்ளை (1891–1956) போன்றவர்கள் செய்தனர். அதுபோல தொல்காப்பியத்தை முதன்முதலில் பதிப்பித்த பெருமை வ.உ. சிதம்பரம் பிள்ளையைச் சாரும் என்பார் அறிஞர் இ. சுந்தரமூர்த்தி. அறிஞர் உ.வே.சா., அவர்கள் சங்க

இலக்கியங்களைப் பதிப்பிப்பதற்கு முகவை மன்னர் சேதுபதி அவர்கள் பொருள் உதவி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சங்க இலக்கிய ஆய்வு முன்னோடிகள்**

சங்க இலக்கியம் உலக இலக்கியங்களுள் ஒன்று, மிகப் பழமையானது. பாரம்பரிய மிக்கது. எத்தனையோ நாடுகளிலும் மொழிகளிலும் இலக்கியம் தோன்றாத நேரத்தில் தோன்றிய தொன்மையும் முதுமையும் மிக்கது, என்னும் அறிஞர் ச. அகத்தியலிங்கனாரின் கூற்று தமிழின் தொன்மையைப் பறைசாற்றி நிற்பதை அறிய முடிகிறது. அத்தகைய தனித்தன்மை வாய்ந்த தமிழ்மொழியில் தோன்றிய சங்க இலக்கிய ஆய்வுகளுள் முன்னோடியாக கனக சபைப் பிள்ளை (1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்) கே.என்.சிவராசபிள்ளை, பி.டி.சீனிவாச ஐயங்கார், தெ.பொ.மீ., மறைமலையடிகள், ந.சுப்புரெட்டியார், மா.இராசமாணிக்கனார், கைலாசபதி, கா.சிவத்தம்பி, ஏ.கே.இராமானுசம், மு.வ., வ.சுப.மாணிக்கனார், தனிநாயக அடிகளார், பி.எல்.சாமி, ந.சுப்பிரமணியன், கா.சுப்பிரமணியன், மு.சண்முகம்பிள்ளை, தமிழண்ணல், ச.வே.சுப்பிரமணியன், கதிர்மகாதேவன், சொ.ந.கந்தசாமி, சி.பாலசுப்பிரமணியன், கு.வெ.பாலசுப்பிரமணியன், ந.சஞ்சீவ், அ.மணவாளன், இந்திரா மனுவேல், க.ப.அறவாணன், செண்பக ராமசாமி, தாயம்மாள் அறவாணன், குளோரியா சுந்தரமதி, ஆலிவ், அ.பிச்சை, மு.மணிவேல் (கைக்கிளை), செ.சாரதம்மமாள் (சங்கச் செவ்வியல்), கா.காளிமுத்து, கா.மஞ்சுளா, கி.ராஜா, பெ.மாதையன், சிலம்பு நா.செல்வராசு போன்றவர்கள் சங்க இலக்கிய ஆய்வில் தடம் பதித்தவர்களாவார்கள்.

**சங்க இலக்கிய ஆய்வுத்தளங்கள்**

'சுற்றிலும் பார்த்தேன், வறண்ட முட்செடிகள் என்று கருதியிருந்த செடிகளில் மலர்ந்த பூக்கள் நிறைந்திருந்தன. எங்கும்

நறுமணம் வீசிற்று. இதுதான் தமிழின் மறுமலர்ச்சி எங்கும் கமழும் தமிழ்மணம் என்று உணர்ந்தேன்.' என்பார் ஆர்.கே. சண்முகஞ்செட்டியார். தமிழின் மறுமலர்ச்சிக் காலம் என்பது தங்கத்தமிழினை ஆய்வுக்கு உட்படுத்தி, அதன் கூறுகளையும், தனிச்சிறப்புகளையும், பெருமைகளையும், தலைமைப் பண்புகளையும், பொதுத் தன்மைகளையும் விளக்குகின்ற காலமாகும் என்பதை அறியமுடிகிறது.

சங்க இலக்கியங்களைத் தேடித் தொகுத்தல், அவற்றை அடிவரை பொருள்வகை, திணை வகை, கூற்றுவகை என பலவாறு பிரித்து தொகை, பாட்டு என்று பாகுபடுத்தியமுறை ஆராயத்தக்கது. பகுத்திட்ட சங்கச் செவ்வியல் இலக்கியத்தைப் பதிப்பு செய்த முறை போற்றத்தக்கதாகும். எல்லோரும் படிக்கும் வண்ணம், கடினமான புலவர் தமிழைப் பாமர மக்கள் படிக்கும் வகையில் உரை எழுதிய மரபும், உரை வகுத்திட்ட நெறிமுறைகளும் ஆய்வுக்குட்பட்ட சங்க இலக்கியங்கள் கால ஆராய்ச்சி, பரந்துபட்ட ஆராய்ச்சி (அகம் (அ) புறம்) நுணுக்கமான ஆய்வு (ஒரு துறை, கூற்று, திணை, புலவர்), யாப்பியல் ஆய்வு, முத்தமிழ் கூறுபற்றிய ஆய்வு போன்றவை சங்க இலக்கியத்தின் வழி ஆராயப்பட வேண்டும். இலக்கண இலக்கிய ஒப்பீட்டாய்வு, பிறதுறை ஆய்வுகளான உளவியல், அறிவியல், பொருளியல், தத்துவம், எண்ணியல், மானுடவியல், அறிவியல், பயிரியல், வாழ்வியல், விழும்புநிலை, மக்களியல், பெண்ணியம், வாசிப்புக் கோட்பாட்டியல், புதுக்கவிதைக் கூறுகள், நவீனக் கோட்பாட்டியல், தகவல் தொடர்பியல், பிறமொழி இலக்கியக் கொள்கையுடன் – தமிழ் இலக்கிய, இலக்கண கொள்கையை ஒப்பீட்டு ஆராய்தல் போன்றவை சங்க இலக்கியத்தின் வழி ஆராயப்பட வேண்டும். மொழியியல் கோட்பாட்டை சங்க இலக்கியங்களில் பொருத்திப் பார்த்தல் அவசியமாகிறது. (தெ.பொ.மீ, வ.அய்.சுப்பிரமணியன், ச.அகத்தியலிங்கம், செ.வை.சண்முகம் போன்றோர் இவ்வாய்விற்கு முன்னோடிகளாவார்கள்) பல மொழிப்

புலமைப் பெற்று, சங்க இலக்கியத்தை மொழி பெயர்ப்பு செய்தலும், அவற்றில் ஏற்படும் சிக்கலுக்கான தீர்வை கண்டறிதலும் அவசியமாகிறது. 'தமிழ் இலக்கியங்களை தமிழ் இலக்கியக் கொள்கைகளான உள்ளுறை, இறைச்சி, நோக்கு, முன்னம் போன்றவற்றில் பொருந்தி ஆராய்ந்தால் ஆய்வில் புதுப்புது வெளிச்சம் பிறக்கும் என்பார் தமிழறிஞர் இரா. மோகன், அன்னாரின் கூற்றுக்கிணங்க தொல்காப்பிய இலக்கியக் கொள்கைகளைக் கொண்டு சங்கத்தமிழை ஆராய்ந்தால் புதுமைக் கருத்துக்கள் வெளிவரும் என்பது வெள்ளிடைமலை. இத்தகைய சின்னஞ்சிறு சொற்களால் ஆன சங்க இலக்கியங்களை ஆராய்ந்து அதில் கிடக்கும் செல்வங்களை அள்ளிப்பாருங்கள், அனைவரிடமும் அச்செல்வத்தின் சிறப்பைச் சொல்லி மகிழுங்கள். கணி ப்பொறி காலத்திற்கு ஏற்ப தமிழிலக்கிய ஆய்வுகளை நுணுக்கமாகவும், செறிவாகவும், ஆழமாகவும், ஆராயும் போது அரிய கருத்துக்கள் வெளிப்படுவதோடு செவ்வியல் இலக்கியத்தின் தனித்தன்மை உலக முழுக்க இன்னும் கூடுதலாக பரவ வாய்ப்புண்டு. அந்நிலை பெற வேண்டுமெனில், பிறமொழிப் புலமை அவசியம். அன்னைத் தமிழைப் பரப்ப அயல் மொழிகளைக் கற்க வேண்டியது தமிழ் ஆய்வாளர்களின் கடமை.

உலகில் உள்ள மொழிகளெல்லாம் எழுத்துக்கும், சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கண்டுள்ளன. தமிழ் மொழிக்கு மட்டுமே எழுத்து, சொல், பொருள் எனும் மூன்றினுக்கும் இலக்கணம் கண்டனர் நம் முன்னோர்கள். பழமையும், தொன்மையும் வாய்ந்திட்ட தமிழ் மொழியினை 2004ம் ஆண்டு ஜீலை 17ம் நாள் செம்மொழி எனும் தகுதியைத் தமிழுக்கு அளித்தது நடுவண் அரசு. அதன் விளைவாக மைசூரில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் அமைக்கப் பெற்றது. இம்மையம் தற்போது சங்க இலக்கியப் பயிலரங்கம் என்னும் பயிற்சிப் பட்டறையினை தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழக, கல்லூரிகள் போன்றவற்றில் சங்க இலக்கியங்கள் குறித்தான ஆராய்ச்சியையும், தேடல்களையும் முன்வைத்துள்ளது.

இம்மையத்துடன் இணைந்து தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினரும் கிராமங்கள் தோறும் சங்க இலக்கியத்தை அறிமுகப்படுத்தி வருகின்றனர். இம்மையத்தின் செயல், நிலத்தினும் பெரிதாய் வானிலும் உயர்ந்ததாய் விளங்கிற்று என்றால் மிகையாகாது.

**முடிவுரை**

சங்கப்பனுவல்களை ஆழ்ந்து கற்று, ஆராயப்புகும்போது, அச்செய்யுள் கருத்துக்கள் நம்மை ஆட்கொள்கிறது. சங்க இலக்கிய வாசிப்பு உடலுக்கும் உள்ளத்திற்கும் நலம் பயக்கும். செவ்வியல் தமிழின் நிலை உயரும். மேலும் தமிழின் மேன்மை பெருகும். சிறக்கும். சங்க இலக்கியத்தின் தனிச்சிறப்பு யாதெனின், எந்தவித கொள்கையையோ, கோட்பாட்டையோ பொருத்திப் பார்க்கும் போது அதற்கு இடம் தரும் களமாக அமைகிறது. இந்நிலைக்கு அவ்விலக்கியத்தின் செவ்வியல் தன்மையே முதற்காரணமாய் அமைகின்றது.

**ஆய்வுக்கு பயன்பட்ட நூல்கள்**


1. ச.அகத்தியலிங்கம், சங்க இலக்கியங்கள், செவ்வியல் இலக்கியங்களே
2. க.பஞ்சாங்கம், தமிழ் இலக்கிய திறனாய்வு வரலாறு
3. ம.திருமலை, இலக்கிய நுட்பம், அணிந்துரைப்பகுதி
4. இ.சுந்தரமூர்த்தி, குறுந்தொகை மூலமும் உரையும், அணிந்துரைப்பகுதி
5. வ.சுப.மாணிக்கம், தமிழ்க்காதல்

# வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் வாழ்வும், பணியும்

முனைவர். **க.சின்னப்பா**
முதல்வர்,
செந்தமிழ்க்கல்லூரி. மதுரை.

**முன்னுரை**

தமிழ்நாட்டில் பல வள்ளல்கள் தோன்றி மறைந்தனர். அவர்கள் மறைந்தாலும் அவர்களின் புகழ் இன்றும் மக்களிடையே பேசப்பட்டு வருகிறது. அவ்வள்ளல்களில் ஒருவராகிய வள்ளல் பொன்.பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு வள்ளலாக இருந்தார். இவ்வள்ளலின் வாழ்வும், பணியும் வணங்கு–தலுக்குறியது.

**பிறப்பு**

தமிழ் வள்ளலான பொன்னுச்சாமித் தேவருக்கும், முத்துவீராயி நாச்சியாருக்கும் 21.3.1867–ல் மூன்றாவது மகனாகப் பாண்டித்துரைத் தேவர் தோன்றினார். இளம் வயதிலேயே தந்தையை இழந்த இவர் சேஷாத்திரி ஐயங்கார் கண்காணிப்பில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்.

> **"பேச்சிலே பெரியசாமி**
> **பெருமையிலே சீமைச்சாமி**
> **அழகிலே பாண்டித்துரை**
> **அமைந்தார் பொன்னும் சாமிமக்கள்"**

என்னும் நாட்டுப்புறப் பாடலின் மூலம், பாண்டித்துரைத் தேவரும், அவர் உடன் பிறந்தோரும் வளர்ந்த சிறப்பினை அறிய முடிகிறது.

***கல்விப்பயிற்சி***

*சேஷாத்திரி ஐயங்காரின் கண்காணிப்பில்*

பாண்டித்துரையவர்கள் தக்க கல்விப்பயிற்சி பெற்று வந்தார். அழகர் ராஜீ என்ற புலவர், இளம் பருவம் முதல் ஆசிரியராவர். வழக்குரைஞர் வேங்கடேசுவர சாஸ்த்திரி என்பவர் இவரது ஆங்கில ஆசிரியராயிருந்தனர். இவர்களின் திறமையாலும் தம் இயற்கையறிவினாலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பாண்டித்துரைக்கு இளமையிலேயே வாய்த்தது. இராமநாதபுரத்தில் ஸ்வார்ட்ஸ் துரையால் உருவாக்கப் பெற்ற உயர்தரப் பள்ளியில் சேர்ந்து இவர் ஆங்கிலப் பயிற்சி பெற்று வந்தார். அக்காலத்தில், அப்பள்ளிக்குத் தலைவராக இருந்தவர் ஷீட்டி துரை என்பவர். இவர் தேவரின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி வந்தார். தேவருடன் பள்ளித் தோழராக இருந்தவர்களிலே பூச்சி சீனிவாச ஐயங்காரும் ஒருவர்.

**பாலவனத்தம் ஜமீன் நிர்வாகம்**

பாண்டித்துரைத் தேவர் தம் சொத்துக்களை ஏற்கும் பருவத்தை அடைந்தார். இராமநாதபுரம் பாலவனத்தம் என்ற ஜமீனும் வேறு பல கிராமங்களும் இவர்க்கு உரிமைகளாக அமைந்தன. அவ்வுரிமைச் சொத்துக்களின் நிர்வாகம் யாவும் தேவரின் நேர் பார்வையில் அமையும் படி, ஏஜண்டு சேஷாத்திரி ஐயங்காரால் 1884ம் வருடம் ஏப்ரல் மாதம் 4-ம் தேதி அளிக்கப்பட்டன.

பாண்டித்துரைத் தேவர் தம் ஜமீன் நிர்வாகத்தை அடைந்த சில ஆண்டுகளில் பாஸ்கரரும் சேதுபீடத்தில் அமர்ந்தார். ஆகவே, பெரும் பொருட்செல்வங்களையும், கலைச் செல்வங்களையும் தங்கள் குல தனங்களாகப் பெற்ற சேது குலத் தோன்றலும், தேவர் குலத் தோன்றலும் ஆகிய தமிழ்ச் செல்வர் இருவரும் சூரிய சந்திரர் தோற்றம் போல இராமநாதபுரத்தைப் பொலிவு பெறச் செய்தனர்.

இவ்வாறாக ஜமீன் பொறுப்பேற்ற பாண்டித்துரைத் தேவர் அவர்கள் பல்வேறு பணிகளையும் மேற்கொண்டு செயல்படுத்தினார்.

**பதிப்பு பணிக்கு உதவி**

தமிழ் நூல்கள் மறைந்து விடாமல் இருப்பதற்காகத் தம் கொடைக்கரம் கொண்டு பதிப்புக் கலையால் மீட்ருவாக்கம் கொடுத்தவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள்.

கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப்–பேராசிரியராய் இருந்த உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள், தேவர் அவர்களால் இராமநாதபுரத்திற்குப் பல முறை அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றார்கள். அறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை என்ற இரண்டு பழைய நூல்களையும் முதலில் உ.வே.சா. அவர்கள் வெளியிடுவதற்கு வேண்டிய பொருளுதவி செய்தவர் நம் தேவர் அவர்கள்.

தேவர் அவர்கள் தம் ஆசிரியருள் ஒருவரான இராமசாமி பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையைக் கொண்டு, தேவாரத் தலைமுறைப் பதிப்பை முதன் முதல் வெளியிடத் தூண்டி உதவி புரிந்தார். சிவஞான முனிவர் இயற்றிய பிரபந்தங்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி, "சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு" என்ற பெயருடன் பிள்ளையவர்கள் வெளியிட்ட நூல் நம் தேவரின் பொருளுதவி பெற்று வெளிவந்தவையாகும். சபாபதி நாவலர் என்ற பெரும் புலவரைக் கொண்டு, சிவஞான முனிவரால் இயற்றப்பட்ட "சிவசமவாத உரை மறுப்பு" முதலிய வாத நூல்களை வெளியிடச் செய்தார். சுன்னாகம் குமாரசாமிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்த நூல்கள் சிலவும் தேவரின் ஆதரவைப் பெற்று வெளிவந்தனவாகும்.

**தமிழ்ச்சங்கம் தோற்றம்**

காப்பியக் கவிஞர்கள் தம் கவித்திறத்தால் தமிழ்த்தாய்க்கு

அழகு செய்யும் வண்ணம் பல காப்பியங்களைப் பாடி அழகு செய்தனர். நம் தேவர் அவர்களோ தமிழ்த்தாய் குடிகொள்வதற்கு சங்கம் அமைத்துக் கொடுத்து, அச்சங்கத்தில் தமிழ் மொழி செழித்து வளர்வதற்கு வழிசெய்தார்.

பாண்டித்துரைத் தேவர் ஒருமுறை மதுரைக்குச் சென்று அங்கே சில காலம் தங்க நேர்ந்தது. தேவர் வருகையை அறிந்த மதுரை அறிஞர் பலர் அவரது சொற்பொழிவுகளைக் கேட்கப் பெரிதும் விரும்பினர். பாண்டித்துரைத் தேவர் சொற்பொழிவு நடத்த நேர்ந்த போது கம்பராமாயணம், திருக்குறள் முதலிய நூல்கள் வேண்டியிருந்தன. அவை பெற விரும்பி நண்பர் சிலரிடம் சொல்லி அனுப்பினார். நூல்கள் எவரிடமிருந்தும் இவர் கைக்கு எட்டவில்லை. இந்நிலையை அறிந்ததும் செந்தமிழின் பிறப்பகமான மதுரையிலே, 'தமிழ்க்குக் கதியாய்த் திகழும் கம்பராமாயணமும் திருக்குறளும் கிடைப்பது அருமையாய் விட்டதே' என்று பாண்டித்துரைத் தேவர் வருந்தினார். அவ்வருத்தம் அவருள்ளத்தில் நன்கு பதிந்தும் விட்டது. அப்பெருங்குறை நீங்க மதுரையில் தமிழ் வளர்ந்தோங்கும் படி செய்யும் வழிமுறையைப் பாண்டித்துரைத் தேவர் ஆராய்ந்தார்.

**மாகாண அரசியல் மாநாடு**

1901-ம் ஆண்டு மே மாதம் 21, 22, 23 ஆகிய நாள்களில் சென்னை மாகாண அரசியல் மாநாடு மதுரை மாநகரிலே கூடியது. அதன் பொருட்டு அரசியல் துறை வல்லுநர்களும் அறிஞர்களும் அப்பெருநகரில் கூடினர். அக்கூட்டத்திற்கு நம் வள்ளல் துணைத் தலைவராயிருந்து, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்றுச் சொற்பொழிவு ஆற்றினார். மூன்று நாட்கள் கூடி, பல அரசியல் தீர்மானங்களை அம்மகாசபை நிறைவேற்றியது. அதன் முடிவில் பாண்டித்துரையார் தம் வேண்டுகோளொன்றை அச்சபையோர்க்கு வெளியிட்டார். தமிழ் வளர்ச்சி பெருகியிருந்த

மதுரை மாநகரின் பழம் பெருமைகளையும், அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலையையும் சுருங்கக்கூறி அந்நகரில் தமிழ் மொழி நிலைபெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்றை உருவாக்க விரும்புவதாகவும், மறுநாள் சேதுபதி பள்ளி மண்டபத்தில் கூடப்போகும் பேரவைக்கு மாநாட்டுப் பிரதிநிதிகளும் நகரமக்களும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மறுநாள் கூடிய கூட்டத்தில் தமிழ்ச்சங்கம் அமைப்பது ஒருமனதாக நிறைவேறியது. இம்மாநாடே நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றுவதற்குக் கருவாய் அமைந்தது.

**தமிழ்ச்சங்க உருவாக்கம்**

1901–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பெறும் செய்தி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் பிற அறிஞர்களுக்கும் அழைப்புக் கடிதங்கள் சென்றன. பிலவ வருடம் ஆவணி மாதம் 13–ஆம் தேதி, *பானுவாரமும், சித்திரா நட்சத்திரமும்* கூடிய நன்னாளிலே பகல் 1.30 மணிக்குமேல் 2.45 மணிக்குள் தனுர் லக்னத்தில் சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தே சேது வேந்தர் திருமுன்பும் பேரறிஞரின் குழாத்திடையும் மதுரைத் தமிழ்ச்சங்கம் உருவாக்கப்பெற்றது. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச்சிச் சாலை முதலியன சேதுபதி பள்ளியை ஒட்டியிருந்த தனிக் கட்டடங்களில் அன்றே தொடங்கப் பெற்றன. அரசரும் புலவரும் பிறரும், 'மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் வாழ்க' என்று ஒரு சேர வாழ்த்தலாயினர். அன்று முதல் மூன்றுநாள் வரை நடந்த பெருங்கூட்டங்களில் அரிய பல சொற்பொழிவுகளை அறிஞர் பலர் நிகழ்த்தினர்.

வடலூரில் மண்ணுயிர்களுக்கு வயிற்றுப்பசி இல்லாதிருக்க வள்ளலார் ஏற்றிவைத்த தீபம் இன்றளவும் எரிந்து கொண்டே இருக்கிறது.

வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவரோ அறிவுப்பசி போக்குவதற்காகவும் அதன் வாயிலாகத் தமிழ் வளர்ச்சி பெறுவதற்காகவும் மதுரையில் தமிழ்த் தீபம் ஏற்றி வைத்தார். சங்கம் வைத்து தமிழ் வளர்த்தல் என்பது பாண்டித்துரைத்தேவர் வாழ்வில் மெய்யானது.

**பாண்டித்துரைத் தேவரின் இலக்கியப் பணி**

பாண்டித்துரைத் தேவர் நாவன்மை மிக்க பேச்சாளராகவும், சிறந்த ஆய்வாளராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல் கவிபாடுவதில் வல்லவராகவும் திகழ்ந்தார். இவர் இயற்றியனவாகப் பின்வரும் படைப்புகள் காணப்படுகின்றன.

1. *சிவஞானபுரம் முருகன் காவடிச்சிந்து*
2. *ராஜராஜேஸ்வரி பதிகம்*
3. *சிவஞான சுவாமிகள் இரட்டை மணிமாலை*
4. *தனிப்பாடல்கள்*
5. *ஆராய்ச்சிப் பதிப்புரைகள், முகப்புரைகள் முதலியன.*
6. *பன்னூல் திரட்டு*

இப்படைப்புகள் அனைத்தும் இவரது இலக்கியப் பணியின் சிறப்பினைப் பறை சாற்றுவனவாகத் திகழ்கின்றன.

**மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும்**

தேவர் அவர்கள் மிகுந்த செந்தமிழ்ப் பற்று மிக்கவர். தமிழில் பிழை மலிந்த நூற்பதிப்புகளைக் கண்டு அப்பிழைகள் தமிழ்த்தாயின்

அங்கத்தில் ஏற்பட்ட வடுவாக எண்ணி அதற்கு மருந்தாகவும் தானே அமைந்தார். இதுபற்றி ஒரு சிறு நிகழ்ச்சி,

மதுரையில் ஸ்காட் துரை என்ற ஆங்கிலோ இந்தியர் ஒருவர் வக்கீலாக இருந்தார். இவர் தமிழ் மொழியில் அரைகுறையான பயிற்சியுடையவர். வள்ளுவரது திருக்குறள் பாட்ல்களில் எதுகை மோனை இல்லாத இடங்களை யெல்லாம் திருத்திப் புதியதான குறட் புத்தகமொன்றை அச்சிட்டு வெளியிட்டிருந்தார். மதுரையில் தேவர் அவர்களை அவர் ஒரு முறை சந்தித்த போது, தாம் செய்த அவ்வரிய வேலையைத் தெரிவித்து, அதன் பிரதியொன்றையும் தேவர்க்கு அளித்தனர். அதைப் பெற்ற தேவர், அதன் முதற்பக்கத்தைத் திறந்ததும்.

'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
உகர முதற்றே உலகு.'

என்று அமைந்திருந்தது. இவ்வாறே பல குறட்பாக்கள் திருத்தப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டதும் தேவரவர்கட்குக் கோபம் ஒரு பக்கம் பொங்கி எழுந்தது. ஆயினும் அதை அடக்கிய வண்ணமே அவரிடமிருந்த மொத்த பிரதிகளையும் தாமே வாங்கிக் கொள்வதாகக் கூறி, அப்பிரதிகளை வாங்கிக் குழியொன்று தோண்டிப் அப்புத்தகப் பிரதிகள் முழுமையும் அதனுள் இடச் செய்து தம் கண் முன் தீயிட்டுக் கொளுத்தும் படி உத்தரவிட்டார்.

தேவரவர்கள் தேசபக்தியும் தெய்வபக்தியும் மிகுந்தவர். பாரி தம் நாட்டில் முல்லைக் கொடி வாடாமல் இருப்பதற்காகத் தாம் ஓட்டி வந்த தேரினை ஈந்தான். அவனின் கொடை மரபில் வந்த

வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள். தமிழ்நாட்டுக் கடலில் கப்பல் விட எண்ணிய வ.உ.சிக்கு ரூபாய் ஒரு லட்சம் கொடுத்து உதவியதோடு தமக்கு வேண்டியவர்களையெல்லாம் அதனில் ஈடுபடும்படி செய்து உதவினார். அவர்கள் காலத்தில் அவர் கொடுத்த ஒரு லட்ச ரூபாய் என்பது இன்று பல கோடிகளுக்குச் சமமானது.

இத்தகைய அரும்பணியை ஆற்றிய தேவரவர்கள் 1911–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2–ஆம் தேதி விண்ணுலகம் அடைந்தார்.


தமிழுக்காக ஓடி உழைத்த உத்தமர் தனிமையில் உறங்க எண்ணியதை நினைத்து 'செந்தமிழ் வளர்த்த செல்வப் பாண்டியன் சென்றனரே' என்று தமிழ்ப்புலவர் பலர் வருந்தினர்.

## முடிவுரை

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க, பாண்டித்துரைத்தேவர் கருவிலே திருவுடையராய் இம்மண்ணுலகில் தோன்றி தமிழுக்கும், தமிழ்த் தாய்க்கும் பணிகள் பல செய்து புகழொடு இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரின் வாழ்வும், பணியும் இன்று வரையிலும் தமிழ் உள்ளங்களில் நிலைத்து நிற்கின்றது.

செந்தமிழ் இதழைப் பற்றிய தங்களது திறனாய்வுகள் வரவேற்கப்படுகின்றன. – ஆசிரியர்



மதுரைத் தமிழ்ச் சங்கம் - 1901.

தொடர்பு முகவரி :

**ஆசிரியர், செந்தமிழ்,**

**மதுரைத் தமிழ்ச்சங்கம்,**

**மதுரை–625001.**

தொலைபேசி : **0452-6575615**

RNI Regd. No.: 5508/56 May 2008

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. சுப. அண்ணாமலை
முனைவர் திரு. தமிழண்ணல்
பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்
டாக்டர் திரு. ந. சேதுராமன்
முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி
முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் கதிர் மகாதேவன்
முனைவர் பெ. சுயம்பு
முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி
இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி
முனைவர் திரு. செ. கந்தசாமி
முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,